[8th November 1965

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : மாவட்டத்திற்கு ஒரு இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்டாக ஆரம்பிக்கிற திட்டத்தில், தென்னுற்காடு மாவட்டத்தில் எங்கு ஆரம்பிப்பதாக அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது ? எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கேள்வி புவனகிரியில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படுமா என்பதைப் பற்றியது. இல்லை என்று சொன்னேன். தனிக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்து சொல்ல முடியும்.

Regional Foundry Station

*313 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal under consideration of the Government for the establishment of a Regional Foundry Station in the State for the testing of raw materials like metals and sand to be used for the manufacture of quality castings; and

(b) if so, the details thereof ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) The National Metallurgical Laboratory, Jamshedpur, a Government of India undertaking, has set up at Guindy, a Regional Foundry Station which is a research centre meant for providing technical know-how to private and public foundries and to offer testing facilities. There is no other proposal pending with Government.

திரு. வை. சங்கரன் : இதனாலே தனியார் துறை, பொதுத் துறையில் நம் மாநிலத்திற்கு கிடைக்கக்கூடிய பலன் என்ன அளவிற்கு என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'ரிஸெர்ச் அன்ட் டெஸ்டிங் ஃபெசிலிட்டீஸ்' தென் பிராந்தியத்தில் கிடையாது. பௌண்டரி போர்ஜ் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள், உறுப்புகளை எல்லாம் சரியான அளவுக்கு 'எபிஷியன்ட்' டாக இருக்கிறதா என்று 'டெஸ்ட்' செய்து பார்க்க வசதி செய்து கொடுக்கிறோம்.

மதுரை தொழிற்பேட்டையில் தீ விபத்து

*344 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்மையில் மதுரை தொழிற்பேட்டையில் உள்ள பெட்ரோல் டாங்கியில் தீ விபத்து ஏற்பட்டு உயிர்களுக்குச் சேதம் விளைவித்தது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

8th November 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) There was no fire accident in any petrol tank in the Industrial Colony, Madurai.

On 6th June 1965 a fire accident took place at a Super 'B' type unit in the above Industrial Colony, resulting in the death of two workers.

(b) The accident was caused on a weekly holiday when the workers attended to the maintenance works in the gas plant of the factory. Two persons died in the hospital due to burns. Two more persons who were injured survived.

திரு. கரு. சீமைச்சாமி : இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவர்களுக்கு எல்லாம் 'எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷுரன்ஸ் ஆக்ட்' பொருந்தும். அந்த ஆக்ட் பிரகாரம் நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

Southern States' Police

* 345 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any proposal has been received for introducing a common training programme for the Police in the Southern States; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) Proposals are awaited from the Inspector-General of Police.

(அ) & (இ) : போலீஸ் துறைத் தலைவரிடமிருந்து செயற் குறிப்புகளை எதிர்பார்க்கிறோம்.

* 346 கேள்வி—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) போலீஸ் இலாகாவில் பணியாற்றுவோருடைய சம்பள விகிதங்களை மாற்றியமைப்பது பற்றி அண்மையில் போலீஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரலிடமிருந்து அரசாங்கத்திற்கு கோரிக்கை வந் துள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) இவ்விஷயம் குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த விஷயம் குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்வதாகக் கூறினார்கள். எப் போது முடிவு எடுக்கப்படும் ? காலதாமதம் இல்லாமல் சீக்கிரம் முடிவு எடுக்கப்படுமா ?